முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலநக்க நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.08.2022, வெள்ளிக்கிழமை

1. ஓம் என்ற சக்தியே அரங்கா
ஓங்கார சக்தியே தேசிகா
ஆம் என்று நம்பிக்கை வைத்து உன்வழி
அகிலத்தார் வர உலகமாற்றம்
2. மாற்றமது சடுதி நிகழும் எனக்கூறி
மார்க்கமுடன் அருளாசி தன்னை
உற்றதொரு சுபகிருது நள்ளிதிங்கள்
உரைத்திடுவேன் இருபான் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 20 நாள், 05.08.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் திருநீலநக்க நாயனார் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
சோரமில்லா மக்கள்படையை
ஜெகமெங்கும் அரங்கன் படைக்க இருக்க
4. இருக்கவே அரங்கன் கொள்கை உலகினில்
எங்கும் பரவிட மக்களிடை
கருத்தாக மாற்றங்கள் கூடி
கலியினில் ஞானவான்கள் பெருகுவர்
5. பெருகவே ஞானியர்கள் அருளாசி
பிரம்மமாக உலகோர்க்கு கிட்டி
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமை ஞானமாக வந்தடையக் கூடும்
6. கூடவே மனித சக்திகள் எல்லாம்
குருஅரங்கன் ஞான தீட்சை பெற்றதாலே
இடர்வெல்லும் புதுமைகள் அடைந்து
எல்லா வகையிலும் தேற்றம் காண்கும்
7. காண்கவே ஞான பூமியெனும் அடையாளம்
கலியுகத்தில் அரங்கன் தொண்டர்கள் மூலமே
உண்மைபட எங்கும் எதிலுமே
உரைத்திடுவேன் மிகுந்த பாதுகாப்பாக மாறி
8. மாறியே ஞான ஆட்சிக் காலம்
மகான் அரங்கன் வழிகாட்டலால் நடந்தேறும்
தேறிட தொண்டர்கள் அனைவருமே
தேசிகன் ஆசியால் ஞானிகள் ஆகி
9. ஆகியே உலகமெங்கிலும் வலம்வருவர்
அழிவை தடுக்கும் சக்திகளாக மாறுவர்
மகிழவே மக்களின் அத்தியாவசிய தேவைகளை
மண்ணுலகில் பூர்த்தி செய்யும் சக்தி கூடி

10. கூடியே குவலயத்தில் தனித்துவம் பெற்று
குரு அரங்கனால் சர்வ பலமும் அடைவர்
தேடியே ஓங்காரக் குடில் எனும்
தெய்வ தடத்தை அடைந்துவிட

11. அடைந்துவிட உலகம் பாதுகாப்பு பெறும்
அனைவருக்குமே ஆயுள் கீர்த்தி காணும்
தடைகளோடு சோடைகளும் விலகி ஓடும்
தரணியில் ஞான ஆட்சி உருவாகும்
அருளாசி முற்றே

–சுபம்–